Registered No. M. 594



வாலம் II. { 1907-ஷு அக்டோபர் மீ / பிலவங்கஷு அற்பிசி மீ } நம்பர். 4.

அடக்கம்.

1.	கர்னல் ஹேச். எஸ். ஆல்காட் (தொடர்ச்சி)	பத்திராதிபர். ...	41—44.
2.	நன்மை, தீமை. (தொடர்ச்சி)	ஸோமசுந்தர தேசிகர்.	44—48.
3.	போகம். (தொடர்ச்சி)	வி. நாராயணஸாமியையர்.	48—51.
4.	மனேசங்கற்பங்கள் (தொடர்ச்சி)	வீ. ராமச்சந்திர நாயிடு....	52—57.
5.	சமாசாரக்குறிப்பு. ...	...	58—64.

Printed at the "SRI VIDYA VINODINI PRESS," Tanjore

Edited and Published by A. Ramier at Tiruvalur.

Copy-Right Registered.

வருடசந்தாமிகவும் சொற்பம்! தபாற்கூலியுள்பட ரூ 1-8 தான்.

கர்னல் ஆல்காட்.

(28-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

கர்னல் ஆல்காட் என்பவரோ தான் யுத்த இலாகாவில் இருந்த வேலையை ராஜீநாமாவாகக் கொடுத்துவிட்டு வக்கீல் வேலையாகச் சிலகாலமிருந்து ஏராளமான பணம்சம்பாதித்துக்கொண்டிருந்தார். அடுத்தவருடம் பிர்ம்மஞான சங்கத்தை ஸ்தாபித்து மஹான்களால் அவர் ஆப்சு உள்ளவரையில் அக்கிராசனாதிபதியாய் இருக்கும்படி நியமிக்கப்பட்டார். உடனே நியூயார்க் என்னுமிடத்தில் 1875-௵ நவம்பர்௴ 17௳யில் ஓர் உபந்நியாஸம் செய்தார். 1878-ம் ௵த்தில் கர்னல் ஆல்காட் துரையும் பிளாவட்ஸ்கி அம்மையாரும் பம்பாயில சென்று சிலகாலம் வசித்தார்கள். அப்பொழுது கர்னல் துரையவர்கள் மற்றத் தேசத்து சாமான்களை உபயோகப்படுத்துவதை விடத் தங்கள் தேசத்துசாமான்களை உபயோகப்படுத்துவது நலமென்று போதித்து வந்தார். பிர்ம்மஞான சங்கம் முதல் முதல் இந்தியாவில் கூடியபொழுது சுதேச சாமான்களை உபயோகப்படுத்தவேண்டுமென்று முதல் முதல் சொல்லப்பட்டது. அடுத்த வருடத்தில் கூடியபொழுது காங்கிரஸ் சபையும் ஏற்பட்டது. 1880-ம் ௵த்தில் ஸிலோனிலுள்ள பௌத்தர்கள் தங்கள் மதத்தை மறுபடியும் சிரத்தையுடன் அனுஷ்டிக்க ஆரம்பித்தார்கள். இப்பொழுது அவ்விடத்தில் மூன்று காலேஜ்களும், 205 பாடசாலைகளும் இருக்கின்றன. அதில் 177 பள்ளிக்கூடங்களுக்கு கவர்ண்மெண்டில் கிராண்ட் கொடுக்கிறார்கள். 1906-௵ ஜூன்௴ 30௳ வரையில் 25856 பிள்ளைகள் அந்தப்பள்ளிக்கூடங்களில் படித்துவந்தார்கள். கர்னல் ஆல்காட்துரை என்பவர் பௌத்தமதத்தைச் சார்ந்தவரானபடியால் அம்மதத்திற்கு ரொம்பப் பாடுபட்டுவந்தார். தவிரவும், 1889-௵த்தில் அவர் (Jaffna) யாழ்ப்பாணத்திற்குச் சென்றபொழுது ஓர் பெரிய உபந்நியாசம் செய்தார். 25000 ஜனங்கள் அவர் உபந்நியாசத்தைக் கேட்டவர்கள். பௌத்தர்களில் வடக்குப்பக்கத்தில் உள்ளவர்களுக்கும் தெற்குப்பக்கத்தில் உள்ளவர்களுக்கும் அநேக வேறுபாடுகள் இருந்தன. அவர்கள்

அந்நியோந்நியத்தின் பொருட்டு இருவர்களுக்கும் பொதுவான பதினான்கு பொதுவிதிகளை ஏற்படுத்தினர்.

1882-ஆம் ஆண்டில் கர்னல், அம்மையார் இருவர்களும் ஏறக்குறைய தங்கள் திரவியத்தைக்கொண்டே. சென்னபட்டணத்திற்கு அருகே ஆதியார் என்ற இடத்தில் மனோக்யமான ஸ்தலம் வாங்கி அதைப் பிர்ம்மஞான சங்கத்தின் பிரதானஸ்தலம் ஆக்கினார்கள். 1875-ஆம் முதல் 1906-ஆம் வரையில் பூலோகத்திலுள்ள அநேக தேசங்களில் கிளைச்சங்கங்கள் ஏற்பட்டு அவைகளுக்கு மொத்தம் 893 பட்டையங்கள் அனுப்பி இருக்கிறார். அவைகள் 11 செக்ஷன்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இதைத்தவிரச் செக்ஷனாக ஏற்படுத்தக்கூடாதபடி அநேக கிளைச்சங்கங்கள் இராத தேசங்கள் அநேகமுண்டு. உத்தரமகாசமுத்திரம் முதல் தெற்குமகாசமுத்திரம் வரையில் கிளைச்சங்கங்கள் இருக்கின்றன.

அவருடைய காலம், பக்தி, திரவியம், யாவற்றையும் தன் அருமைச்சங்கத்திற்கே அர்ப்பணம் செய்தார். ஒருவர் அவருடைய சங்கத்திற்காக "வலதுகையை நீர் வெட்டிக்கொள்வீரா" என்றுகேட்டதற்கு நான் அப்படிச்செய்வதால் மேற்படி சங்கத்திற்குஏதேனும் நன்மை விளையுமானால் அப்படிச்செய்ய சித்தனாயிருக்கிறேன் என்றார். நண்பர்களே! அவருடைய ஊக்கத்தையும் விசுவாசத்தையும், சிரத்தையையும் பார்த்தீர்களா? பிர்ம்மஞான சங்கத்தின் நன்மையை உத்தேசித்துத் தன்னுடைய சரீரம்எவ்வளவு கஷ்டப்படுவதாக இருந்தாலும் அவைகளுக்கு யோசிக்கப்பட்டவரல்ல. அவர் மரணப்படுக்கையில் மார்படைப்பினால் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கும்பொழுது டாக்டர்கள் அதிசீக்கிரமான காலத்தில் அநேக உபந்நியாசங்கள் அவர் செய்துவந்ததே அதற்குக்காரணமென்று சொல்லிவந்தார்கள். இவர் பூலோக முழுமையும் உலகநன்மைக்காகப் பாடுபட்டுச்சென்று கடைசியில் தமது அருமை வாசஸ்தானமாகிய ஆதியாற்றிற்குத் திரும்பிவந்தார்.

31 வருடகாலம் அநேக சங்கடங்களுக்கு உள்ளாய்க் கம்பீரமாய் அவைகளை வென்றார். பின்னும் மாடம் பிளாவட்ஸ்கி

அம்மையார்பேரில் ஞானமில்லாத சில ஜனங்கள் சொல்லிய தூறுதல்களையும் சிலகாலம் அமெரிக்கா செக்ஷனைச் சேர்ந்த சில ஜனங்கள் மேற்படி சங்கத்தில் நல்ல அபிப்பிராயமில்லாமல் இருந்ததையும் பிறகு ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பிசகுகளையறிந்து மேற்படி சங்கத்தின் நல்ல அபிப்பிராயங்களை நன்குணர்ந்து அபிமானத்தையும் பார்த்துவந்தார். கடைசியில் தமது சகோதரி பிளாவட்ஸ்கி அம்மையார் தன்னைவிட்டுப்பிரிந்து சூக்ஷமலோகம் சென்றதையும் பார்த்துப் பிறகு தான் ஏகதேசத்தில் 16 வருடம் வரையில் மாதுஸ்ரீ அனிபெஸண்ட் அம்மையாரோடு ஊக்கத்துடன் வேலைசெய்து வந்தார். பெஸண்ட் அம்மையாரே பிளாவட்ஸ்கி அம்மையாரின் சிஷ்யர். வெகுசிரத்தையுடனும் பரம விசுவாசத்துடனும் ஆல்காட்துரை அவர்களும் பிளாவட்ஸ்கி அம்மையாரும் தூக்கிவந்த பெருஞ்சுமையை மஹான்களின் ஆக்ஞையின்பேரில் பெஸண்ட் அம்மையாரின் தோளில் இறக்கி அவர்களுடைய திவ்விய ஸேவையைத் தான் அடைந்து அவர்களால் அனுக்கிரஹிக்கப்பட்டு ஸ்தூலலோகத்தைத்தியஜித்த அவர் இறந்தாலும் அவரால் செய்யப்பட்ட பல நன்மைகளை ஜனங்கள் மறக்கமாட்டார்கள். அவர் இறந்தாலும் அவரால் ஸ்தாபிக்கப்பட்ட அநேக சங்கங்கள், பாடசாலைகள் முதலியவைகளைப் பிரத்தியக்ஷமாய் நாம் பார்க்கிறோம். அவர் இறந்தாலும் உலகத்திலுள்ள அநேக மதங்களை அனுஷ்டித்தவர்களில் ஆங்கிலேயபாஷா அப்பியாசத்தாலும், பாதிரிமார்கள் பள்ளிக்கூடங்களில் படித்துவந்த தோஷத்தாலும், நவீனசாஸ்திரப்பயிற்சியாலும், நிரீச்சுவரவாதிகளாயும் தங்கள் தங்கள் மதங்களின் அனுஷ்டானங்களை விட்டவர்களாயும், விட எத்தனிக்கப்பட்டவர்களாயும், கிறிஸ்துமதம், மகம்மதிய மதம் முதலியவற்றைத் தழுவ எத்தனித்த அநேகம் F.A. B. A. M. A. பரீட்சை கொடுத்த ஹிந்து பிராக்ஞர்களும் அவ்வாறே மற்ற மதத்தினர்களும் இப்பொழுது தங்கள் தங்கள் மதங்களின் நூல்களை ஆராய்ச்சி செய்யவும் தங்கள் மதங்களிற் சொல்லியபடி அனுஷ்டித்துவரும் இச்சமயத்தில் அக்கர்னல் ஆல்காட்துரை யென்பவரை ஒருநாளும் மறக்கமாட்டார்களென்பது நிச்சயம். நமது இந்தியாவிற்கும் மற்றுமுள்ள உலகத்தினர்க்கும்

நன்மையே செய்துவந்த மேற்படி துரையவர்கள் சரீரத்தில் நம்மைவிட்டுப்பிரிந்திருந்தாலும், அவர் இப்பொழுது இருக்கிற ஸ்தானத்திலிருந்தபடியே பின்னும் நன்மைகளைச் செய்து சீக்கிரத்தில் நமது மத்தியில் அவதரிப்பாரென நம்புகிறோம்.

ஓம் சுபம்!

(பத்திராதிபர்.)

அபேதாநந்தரின் உபந்நியாஸம்.

நன்மை தீமை (தொடர்ச்சி)

கிறிஸ்தவமதம் பரவ ஆரம்பித்த காலமுதல் கிறிஸ்தவமதக்குருக்கள் இவ்விதமான தீமையென்றொன்று போதித்துவந்த போதிலும், கேட்கும் ஜனங்கள் சர்வ வியாபியாய் ஜகன் மோகனாய் எல்லாம் வல்லராய்க்கடவுள் தன் நற்குண நற்செய்கைகளைக் கெடுத்துவிடும்படியாக ஏன் தீமையென்பதொன்றை ஏற்படுத்த வேண்டும் என்றுவிசாரணை புரிவாரில்லை. இது முக்கியமானகேள்வியல்லவா. இவ்வினாவிற்கு விடையளிக்கும்படி அநேக தடவைகளில் கிறிஸ்தவ ஞானிகளைக்கேட்டும் இன்றுவரை பதில்சொல்ல வகையறியாது விழிக்கிறார்கள். அவர்களுடைய முயற்சியானது நன்மையே பயக்கும் தெய்வத்தைச் சக்தியில்லாதவராகவும், பக்ஷபாதமுடையவராகவும் நியாயமற்றவராகவும், கடூரமானவராகவும் செய்கிறது. ஆனால் சில புருஷ ஞானிகள் கடவுளை நன்மையையும் தீமையையும் உண்டாக்கியவரென்று கொண்டார்கள். "நானே கடவுள், வேறொருவருமில்லை; நானே ஒளியும் இருளும். நானேஎல்லாவற்றையும் செய்கிறேன்." (இஸியா XIV 6.7) இன்னும் நிஹிமியாவென்பவர் "நம்முடைய நன்மையே கங்கணங்கொண்ட தெய்வம் இந்தக் கெடுதலையும் செய்யவில்லையா!" என்று சொல்லுகிறார் (நிஹிமியா XIII 181)

இந்தக்கொள்கையானது பதினேழாம் நூற்றாண்டில் கிளம்பிய கால்வின் கட்சியாரால் ஒப்புக்கொள்ளப்பட்டது. அவர்

கள் கடவுளை நன்மை தீமைக்கு உரித்தானவர் என்றும் அப்படி யில்லாவிட்டால் வியஞ்சகத்துவத்துக்கு குறைவு ஏற்படுமென்று எண்ணினூர்கள். இவ்விதமாகக்கடவுளைப் பகுத்தறிய ஆரம்பித்ததால் பட்சபாதகராயும், நியாயமற்றவராயும் செய்தார்கள். அகஸ்தின் சந்நியாசியார் ஏற்கனவே இவ்விதமாக நடப்பதுஎன்று ஏற்பட்டதென்று கொண்டார். இவ்விதமாகச் சொல்லியது கால்வின் சொல்லியதை விட விசேஷமில்லை. அஞ்ஞானத்திலழுந்தி வருந்தப்படும் உலகத்திற்கு, நன்மை தீமையின் வழியை ஆராயாது, பராபரம் தயையற்றவரெனக் கொள்ளும்படியாயிற்று. ஏன் ஒருவர் போக்கியத்தை யனுபவிக்கவும், மற்றொருவர் துக்கத்தை யனுபவிக்கவும் சிருஷ்டி உண்டாயிற்றென்னும் கேள்வி உண்டாயிற்று. முன்னுடியே ஏற்பட்டதென்னும் காரணம் அவ்வளவு நன்ருகப் பிடிக்கவில்லை. இவ்விதமான விவரங்கள் அநேகரை நாஸ்திகர்களாகவும், எல்லாம் கெடுதலுக்கே ஏற்பட்டதென்னும் கொள்கைக்கு இடமும் தந்தது. அநேகர் இவ்விதமான துஷ்கிர்த்தியங்களையும், துன்பங்களையும் பார்த்து சகியாது, தயை, நியாயம், பட்சமுள்ள ஒரு கடவுளுமில்லை" யென ஓலமிட்டார்கள். மத்திய காலத்தும் பிரதம கிறிஸ்தவாசிரியர்கள் (Gnostics) இவ்வுலகமானது முதலில் துர்தேவதைகளால் நிர்மாணிக்கப்பட்டதென்றும், புண்ணிய தேவதைகளால் கொஞ்சம் கொஞ்சமாக சீர்திருத்தி அனுக்கிரகிக்கப்பட வேண்டுமென்றும் எண்ணினூர்கள். இந்தக் கொள்கை தற்காலம் வரையில் அதே கொள்கை தான் கொள்ளப்பட்டது. அநேக நியாயவாதிகள் (true thinkers) கூட உலகம் கெட்ட எண்ணத்துடன் தான் சிருஷ்டிக்கப்பட்டதென்று கொண்டார்கள். தற்கால நியாயவாதிகளில் பேர்போன ஆகஸ்துகோந்து என்பவர் கூட, இந்த உலகத்தின் கெடுதிகளை உற்றுநோக்கி, காஸ்டில்தேசத்து மன்னனைப் போல் தான் சிருஷ்டிகாலத்திருப்பேனுகில் நல்லபுத்திகள் கற்பித்திருப்பேனென்கிருர்.

இன்னொரு விதமான உலகசுகக்கட்சியார் (optimists) இந்த உலகமானது துக்க துன்பக்களஞ்சியமாயினும், இதை

விட விசேஷமாகச்சிருஷ்டிக்க முடியாதென்றும் கொள்கைக்காரராகவிருக்கின்றனர். தற்கால நிலைமையிருக்கும் வரை நம்மை ஒருபோதும் விட்டகலாத தீமையை மறந்து, காலமானது கெடுதலோடு உழலுவதால் நாம் அதை நல்ல வழியில் உபயோகப்படுத்த முயலுவோம். மற்றொரு உலக சுகக்கட்சியார் சிருஷ்டியில் கெடுதலாவது தீமையாவது இல்லையென்று சொல்லுகிறார்கள். அவர்கள் எல்லாம் நன்மையே யெனச்சாதிக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு செய்கையிலும், காரியத்திலும் நன்மை யிருக்கிறதென்றும், இன்பங்களுட் துக்கமும் நம்முடைய நன்மையின் பொருட்டென்றே சொல்லுகிறார்கள். நமக்குத்திடீரென அபாயம் நேரிடுமாயின் அது நம் நற்காலத்தை முன்னிட்டென்றே சொல்லுகிறார்கள். உலகம் நன்மைக்கேயாகையால் கட்டாயமாக அப்படியே தானிருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அவர்கள் தீமையென்பதுண்டாவதை மறுத்து, நன்மையென்பது நிதரிசனம் என்றும் அது நிதரிசனமாயிராததால் தீமை யென்கிறோமென்று சொல்லுகிறார்கள். நான் நேரில் காணாத போதிலும் கடவுள் சர்வ வியாபியாக விருக்கிறார்என்கிறார்கள் இவ்விதமாகத்தீமையை விசாரிப்பதினின்றும் அதை அடியோடு மறுக்கிறார்கள். இவ்விதமான உலக சுகக்கட்சி அதிமிதமானது; உலக விரோத கட்சியார் கொள்கை மாறாக அதிமிதமாகவிருக்கிறது. அவர்கள் தீமையே குடிகொண்டதென்றும், வெளிப்படையாக யிராததால் நன்மை யென்று சொல்லுகிறோமென்கிறார்கள்- அவர்கள், அழிவும், இறப்பும், துன்பமுமே உலகத்திலடையக்கூடிய முடிவென்கிறார்கள். சந்தோஷமும், சுகமும் அபூர்வமாக வருகிறதென்றும், நாம் கஷ்டங்களையும் கெடுதல்களையும் மாத்திரமே அனுபவிக்க உற்பத்தியானோமென்கிறார்கள். நாம் ஜீவிப்பதன் பொருட்டு சில கஷ்டங்களை யனுபவிக்கத்தான் வேண்டியிருக்கிறது. நாம் நினைத்த படியெல்லாம் உடனுக்குடன் முடியுமானல் நாம் எப்படி மற்றப்பொழுதைக் கழிப்பது? நாம் எப்படி ஜீவிப்பது? வாழ்வதற்கு யாதொரு கஷ்டமுமிராததால் சுறு சுறுப்பிராது. நாமே அறியாமல் நம்மேல் சுமந்திருக்கும் தத்துவங்களை நீக்கினல் தேகம் சிதறுண்டு போமாகை

யால் உலக விரோதக்கட்சியாரின் கொள்கைப்படி, இச்சை, கஷ்டம், ஏழ்மை, கெடுதல்களிலிருந்து விலக்கப்பட்டால் பிறந்ததின் பயனில்லாமற் போகிறது. இதைவிலக்க இறத்தலே நல்வழி. வாழ்வில் நன்மையைப்பார்க்கவேயில்லை. அவர்கள் எங்கே பார்த்தாலும் துக்கத்தையே காண்கிறார்கள். இதைக்கடக்கும் வழியாவது தற்கொலை செய்து கொள்ளுதலாம். இரட்சணையையுடைய தெய்வமானது இந்தக்கஷ்டப்படக்கூடிய உலகத்தைச் சிருஷ்டித்திருப்பாரென்று நம்பவேயில்லை. இவ்வுலகத்தைசிருஷ்டித்தவரும் இன்னாரென்று சொல்லவில்லை. இவ்விதமாக உலக விரோதக் கொள்கையில் விவரங்கள் மற்றொரு அதிமிதத்திற்குச்செல்லுகிறபடியால் நியாய வாதிகள் ஒப்புக்கொள்வது சாத்தியமாகவில்லை.

நன்மை தீமைக்குத் தகுந்த முகாந்திரம் வேண்டியிருக்கிறது. உலக சுகக்கட்சியார் இவ்வுலகம் எல்லாம் நன்மையின் பொருட்டே உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறதென்று கொள்வார்களானால், உலக விரோதக் கட்சியாரும் இவ்வுலகம் துன்பத்திற்காகவே படைக்கப்பட்டிருக்கிறதென்று கொள்வதில் யாதொரு கெடுதலுமில்லை. உண்மை இவ்விரண்டிலும் இல்லை. இரண்டு கட்சிகளும் அதிமிதமே, அதீதப்பொருளால் இப்பிரபஞ்சம் உற்பத்தி செய்யப்பட்டதென்று சொல்லாதவரையில் நன்மை நன்றாக விளங்குவதில்லை. மேற்கில் இப்பொழுது தான் ஜனங்கள் மூடபக்தி பிடிவாதத்தினின்றும் கண் விழித்துக்கொண்டு சாஸ்திரத்தையும் தர்க்கத்தையும் அனுசரிக்கிறார்கள். அதனால் ஒன்றற்கொன்று விரோதமான நன்மை தீமை யென்றிரண்டு இருக்க இயலாதெனவும் பிரகிருதியில் இருக்க முடியாதெனவும் அறிகிறார்கள். எல்லாம் ஒரே சக்தியின் பேதமென நம்புகிறார்கள். பிரகிருதியானதுஒன்றேயொழிய இரண்டல்ல.

நன்மை தீமைகளைச் சிருஷ்டிக்கும் கடவுள் உண்டென்னும் கொள்கையை நீக்கி புனருற்பவத்தை யொப்புக்கொண்டார்கள். ஜிகோவா, சாத்தன் (Satan) பைசாசம் இன்னும் அநேக நாமங்களுடன் அஹுரமேஸ்டாவும் அஹ்ரிமானும் உலகத்தில் அ

நேக நூற்றுண்டுகளாய் ஜீவித்து பிறகுப் இப்பொழுது அந்தகாரத்தில் மூழ்குகிறூர்கள்.

எல். சோமசுந்திரதேசிகர்.

யோகம்.

(9-வது பக்கத்தின் தொடர்ச்சி

7! உன் தாயார் யார்? உன்புத்திரர்கள் யாவர்? குடும்பமென்று எல்லோரும் அபிமானம் வைப்பது மிகவும் ஆச்சரியமானது. நீதான் யார்? நீ ஜனித்து உலகத்தில் வந்த பிரயோஜனம் என்ன? இந்த தத்துவங்களைக் குறித்து பிராந்தியடைந்த மூடா! நன்றாய் யோஜித்துப்பார்.

8. சாதுக்களின் சகவாசத்தினுல் துஷ்டர்களுடைய சம்பந்தம் நீங்கும். அது நீங்கவே மோகமாகிய ஆசை நீங்கும். அதுவும் நீங்கவே மனது ஒரு முகப்பட்டு ஞானமடையும். அந்த ஞானத்தால் மோக்ஷ சாம்பிராஜ்ஜியம் பெறலாம்.

9. வயது சென்ற ஒரு கிழவனுக்கு விஷயாதி போகங்களில் இச்சை ஏற்படுமா? நீரில்லாத குளத்தைத் தடாகமென்று யாரும் சொல்லுவார்களா? பணமில்லாதவனுக்கு செல்வாக்குண்டா? அதுபோலவே சுத்தமான ஞானம் அடைந்தவனுக்கு சம்சாரபந்தம் நீங்கும்.

10. எனக்கு அளவிறந்த திரவியமுண்டென்றும், ஜனக்கட்டுண்டென்றும், நான் ரோகமற்றவனுய் யௌவன ஸ்திதியிலிருக்கிறேனென்றும் கர்வத்தை யடைந்து மயங்காதே. ஏனெனில் காலம் வந்தால் இவைகளெல்லாம் ஒரே நொடியில் பஞ்சாய்ப் பறந்துபோம். ஏனெனில் இவையெல்லாம் வாஸ்தவமல்லாத மாயா சக்தியினுல் ஏற்பட்டதென்று அறிந்து சாஸ்திரத்தில் சொல்லியவாறு பிரம்மபதத்தை அடைய வழி தேடு.

11. பகலென்றும், இரவென்றும், வசந்தகாலமென்றும் மாரிகாலமென்றும், திருப்பித்திருப்பிச் சுற்றிக்கொண்டேவந்து காலம் விளையாட்டாய்க் கழிந்து நம் ஆயுள் வீணாய்க் கழிகிறது. பிறகு துராசை யொன்றுதான் மிகுதியாய் நிற்கும்.

12. மேற்சொன்ன நீதிவாக்கியங்கள் வித்தியா பாரங்கதரான ஸ்ரீ சங்கராச்சாரியரவர்களுடைய உபதேசங்களாக ஏற்பட்டு வையாக்கரணி ஞானத்திற்கு காரணமாயிற்று. பிறகு பகவத் பாதாளுடன் கூட வந்த சிஷ்யர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சுலோகத்தால் கிருபையுடன் உபதேசம்செய்யத்தொடங்கினார்கள்.

1. தோடகர்:—அபிமானமுள்ள உன் மனைவியார்? திரவியம் சம்பாதிக்க காத்தாய்ப் பறக்கிறாயே உன்னைச்சிருஷ்டித்தவர் ஒருவர் உண்டென்ற ஞானம் இல்லையா? அந்த ஞானத்தையடைய மூன்று லோகங்களிலும் நிர்மலமான சாதுக்களுடைய சகவாசமிருந்தால் அது சம்சாரமாகிய மகாசமுத்திரத்திலிருந்து கரையேற்ற ஒரு நாவாய்க்குச் சமானமாகும்.

2. அஸ்தாமலகர்:—ஜடை தரித்துக்கொண்டும், மொட்டையடித்துக் கொண்டும், மயிரைக் கத்தரித்துக்கொண்டும், காஷாயம் தரித்துக்கொண்டும் பின்னும் அநேகவிதமான வேஷங்கள் தரித்துச்சாண் வயிறு வளர்க்க உலகத்தாரை வஞ்சித்துக்கொண்டு துறவிகளென்று தெருத்தெருவாய் அலைகிறார்கள்.

3. சுபோதர்:—சரீரம் வயதுசென்று தளர்ந்துபோகின்றது. பல் விழுந்து, தலை நரைத்து முகம் விகாரமடைகிறது, நடக்க முடியாமல் தடிக்கம்பையூன்றிக்கொண்டு கொள், கொள் என்று இருமிக்கொண்டு தள்ளாடப் பிள்ளாட நடமாடுகிறார்கள். இவ்வித நிலைமையிலிருந்தும் ஆசையானது அவர்களை விட்டுக்கிஞ்சிதமேனும் நீங்குகிறதில்லை.

4. வார்த்திககாரர்:—முன் பக்கம் அக்கினி வைத்துக்கொண்டும் முதுகில் சூரியவெப்பம் அடிக்கத்தபஸ் செய்துகொண்டு இரவில் முழங்காலின் மேல் மோவாய்க் கட்டையை வைத்துக் கொண்டும், கையில் பிச்சைவாங்கிச் சாப்பிட்டுக்கொண்டும் மரத்

தடியில் தனிமையாய் வாசஞ் செய்துகொண்டிருப்பவர்களுங் கூட ஆசை யென்னும் பேய்பிடித்து அலங்கோலப்படுகிறார்கள்.

5. நித்தியானந்தர்:—கெங்காஸ்நானம் சேதுஸ்நானம் முதலிய புண்ணிய தீர்த்தாடனஞ் செய்துகொண்டு சாந்திராயண விரதாதிகளை விதிப்படி அனுஷ்டித்துக்கொண்டும் இருக்கிறவர்களுக்கு ஞானமென்ற உத்தம வஸ்து கிடைக்காவிட்டால் முக்தி யென்பது நூறுகோடி ஜன்மமெடுத்தாலும் கிடைக்கமாட்டாது.

6. ஆனந்தகிரி.—மரத்தடியில் சதாவாசமும், பூமியில் படுக்கையும், தோல்வஸ்திரமும், ஒருவரிடத்தில் ஒன்றையும் இச்சிக்காமலிருப்பதும் சுகமென்று சொல்லப்பட்ட விஷயாதிகளில் வைராக்கியமும், ஒருவனுக்கு ஏற்பட்டால் அவனுக்கு நிரதிசய மான ஆனந்தம் கிடைப்பதரிதா ?

7. திரடபக்தர்:— போக இச்சையினாலாவது, சகலத்தையும் அனுபவிக்கிற இச்சையினாலாவது சகல ஜனங்களுடன் கலந்து சுகங்களை அனுபவித்துக்கொண்டாவது இருந்தாலும் ஒருவன் ஈசுவரனிடத்தில் திரடமான பக்தி செய்வானானால் அவனுக்கு மோக்ஷசாம்பிராஜ்யம் கிடைக்கும்.

8. நித்தியவாதஹர்:—கொஞ்சமாகிலும் பகவத்கீதை பாராயணம் செய்துகொண்டும், கங்கா ஜலத்தின் சொற்பத் துளியை யாவது பானம்பண்ணியும், பகவானான ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியை எப்பொழுதாவது பூஜித்துமிருந்தால் அவனுக்கு யமபாதை இல்லை.

9. யோகானந்தர்:—அடிக்கடி ஜெனனம், மறுபடியும் மரணம் திரும்பவும் தாயார் கர்ப்பத்தில் வந்துகொண்டிருக்கிற மிகவும் கஷ்டமான இந்தச்சம்சார சக்கரத்தினின்று என்னை ஓ கிருஷ்ணமூர்த்தியே காப்பாற்றவேண்டும்.

10, சுரேந்திரர்:—வீதியில் கிடக்கிற கிழிந்தவஸ்திரங்களைக் கட்டிக்கொண்டும், புண்ணியம் பாபமென்ற மார்க்கத்தைவிட்டு விலகினவராயும், யோகாப்பியாசத்தில் தேர்ந்த மகா யோகிகள் குழந்தைகள்போலவும், பயித்தியக்காரர்கள் போலவும், பிசாசு

கள் போலவும், உலகத்தில் அலைந்துகொண்டிருப்பார்கள். அவர்கள் மகிமையைக் காண்பதரிது.

11. மேதாதீதர்:—நீ யார்! நான் யார்! வந்தகாரியமென்ன? என் தாயார் யார்? தகப்பனார் யார்? இப்படி பாதிக்கப்பட்ட சம்சாரத்தை விட்டு நீங்கித்தத்துவத்தை விசாரித்தால் எல்லாம் சொப்பனமாய் விளங்கும்.

12. பாரதிவம்சகர்:—உன்னிடத்திலும், என்னிடத்திலும் எவ்விடத்திலும் அந்தரியாமியா யிருக்கிற விஷ்ணு ஒருவரே ஏன்விஷ்ணுவில்லாமனென்று பாவித்துக்கஷ்டப்பட்டுத் துக்கிக்கிறாய் எல்லா ஜீவகோடிகளையும், பேதபுத்தியைவிட்டுச் சமமாய்ப் பார்ப்பாயானால் சீக்கிரத்தில் விஷ்ணு பதத்தை யடைவாய்.

13. சுமதிகி:— ஆசை, கோபம், மோகம் இவைகளைவிட்டு தன்னிடத்திலேயே ஆத்ம சொரூபத்தைப்பார். அப்படிச் செய்யாத மூடர்கள் மிகவும் துன்பத்திற்கு ஏதுவான நரகத்தில் மூழ்கிக்கிடப்பார்கள்.

14. வித்தியானந்தர்:— தினமும் பகவானுடைய ஆயிர நாமாக்களை தியானம் பண்ணிக்கொண்டும் ஸ்ரீபதியாகிய கிருஷ்ண பகவானுடைய ரூபத்தை சதாதியானம் பண்ணிக்கொண்டும் சாதுக்களுடைய சங்கத்தை எப்பொழுதும் ஆசிரயித்துக்கொண்டும் தனது திரவியத்தை மிகவும் ஏழைகளாகிய சத்பாத்திரத்தில் வினியோகம் செய்துகொண்டுமிருப்பது உத்தம தர்மம்.

இவ்விதமாக மூடனாகிய "டுக்ரீங்கரணே" என்று உச்சரித்துக் கொண்டிருந்த அவ்வையாகருணிக்கு மேற்குறித்த பகவத் பாதருடைய சிஷ்யர்களும் உபதேசிக்கவே அவன் நற்கதி யடைந்தான்.

(ஓம் தத் ஸத்.)

ஸி. நாராயணசாமிய்யர்.

(புதுக்கோட்டை.)

மனோசங்கற்பங்கள்.

நம்மில் அநேகருக்குசங்கற்பங்கள் சில்பாகம் அறிவையூன்றியதாயும் சிலபாகம் விஷய இச்சைகளை ஊன்றியதாயுமிருக்கின்றன அறிவால் மானசிகசரீரமும் விஷய இச்சைகளால் புவர்லோக சரீரமென்ற காமசரீரமும் அமைகிறது. பிராபஞ்சிகவிஷய இச்சையுள்ளவனுக்கு தெய்வபக்தி யுள்ளவன் மனதின்கண் ஜனிக்கும் பக்தியும் நாட்டமும் ஜனிப்பதில்லை. அவனுக்கு அது ஸம்பந்தமாய் என்னவோதினும் "செவிடன்காதில் ஊதிய சங்குபோல்" ஏற்காது. விழலுக்கிறைத்த ஜலம்போலாகும். இவ்விதமே சிலருக்கு அசங்கியமான எண்ணங்கள் ஏற்பதில்லை. சிலருக்குச்சாமான்யமான கீழ்த்தரப்படிப்பு எத்தனை விதந்தான் சொல்லிக்கொடுக்கினும் போதமாவதில்லை. சிலருக்கோ அபாரவித்தைகூட ஒருதரம் சொன்னமாத்திரத்தில் போதமாகிறது. ஆகையால் வித்தை கற்பித்தல் அந்த வாஸனையை அடைந்துள்ள அதிகாரிகளுக்குப் போதமாகுமே ஒழிய மற்றவர்களுக்கு என்னபோதிக்கினும் ஆகவேமாட்டாது. இதற்குக்காரணம்: நாம் ஒரு மேஜையின்பேரில் ஓரேதன்மையான இரண்டு கிண்ணங்கள் வைத்து அவற்றில் ஒருகிண்ணத்தைத் தட்டி நாதங்கிளம்பியதும் தட்டிய கிண்ணத்தை மீளவும் பிடித்துக்கொண்டாலும்கூட அதற்கு அனுசரணையாகவுள்ள மற்றொருகிண்ணம் அதே நாதத்தைக் கிரஹித்துப் பிரதி ஒலிக்கும். இது போலவே ஸங்கற்பங்களும் அவைகளுக்கு ஈடாகவுள்ள ஸங்கற்பங்களைக் கிளப்பிவிடுமே ஒழிய ஒத்திராத சங்கற்பங்களைக் கிளப்பமாட்டாது. ஒருவனுடைய ஸங்கற்ப ரூபம் இதரனை எவ்விதம் சலிக்கப்பண்ணுமென்ற சங்கை சிலபேர்களுக்கு உண்டாகலாம். ஏற்கனவே ஸொர்க்கங்களுக்கும் கோசங்களுக்கும் பரஸ்பர ஸம்பந்தமுண்டென்பதைத் தெரிவித்திருக்கிறேன்.

எவ்வாறு ஒரே தடாகத்தில் அமைந்துள்ள பல கிணறுகளில் தடாகஜலமும் கிணறுகளின் ஜலமும் ஏகமாய் ஒத்திருக்கும் சமயத்தில் அக்கிறுணகளில் ஒன்றில் ஒரு கல்லைப்போட்டால் எவ்வா

று அக்குறிப்பிட்ட கிணற்றின் ஜலம் சலித்து அச்சலனம் அதை ஒட்டியுள்ள தடாகஜலத்தை சலிப்பிவித்து அவ்வாறாக மற்ற யாவற்று கிணர்களின் ஜலமும் சலிப்பதுபோலும். இப்பொழுது நவீனமாய்க் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் கம்பியில்லாத தந்திவிஷயத்தில் ஆகாசதத்துவத்தால் செய்யப்பட்டுள்ள பல தந்தியந்திரங்களைப் பலவிடங்களில் வைத்து அதில் ஏதேனும் ஒரு யந்திரத்தைச் சலிப்பிக்கவே அச்சலனம் உடனே எங்கும் வியாபித்துள்ள ஆகாச தத்துவத்தைச் சலிப்பிவித்து எங்குமுள்ள அந்த ஆகாச தத்துவம் சலிப்பதின் மூலமாய் பல விடங்களில் வைக்கப்பட்டுள்ள இதர யந்திரங்கள் எவ்வாறு சலித்து சமாசாரங்களைத் தந்திமரம், தந்திக்கம்பி இவைகளின் உதவியன்றி தெரிவிக்கின்றனவோ இவைகள் போலவே ஒரு ஜீவனுடைய சூக்ஷ்மசரீரம் சலித்ததும், அந்தச்சலனம் அச்சரீரத்தை அனுசரித்துள்ள அந்தச் சூக்ஷ்மலோகமுழுமையும் சலித்து தத்துவாரா அந்தலோகத்திலேயே சகலஜீவர்களின் அவ்வித சூக்ஷ்மசரீரங்களும் சம்மந்தப்பட்டு நிற்பதால் அவ்விதசலனத்திற்குப் பதில் விடையளிக்கக்கூடிய ஒத்தசரீரங்களெல்லாம் அதற்குத்தக்கவாறு சலிக்கிறது. அப்பால் காந்தம் ஊசியை இழுப்பதுபோலும், பக்ஷிஜாதிகளும், மிருகஜாதிகளும் கத்துமானால் எவ்வாறு அந்தந்த இனங்கள்வந்து அந்தந்த இனத்துடன் சேர்ந்துகொள்கின்றனவோ அதைப்போலவே ஒத்த சங்கற்பமுள்ள ரூபங்கள் ஒரேராசிகளாகச் சேர்ந்து பலப்பட்டு ஸங்கற்பங்களுக்குத் தக்கவாறு அந்தராசிக் கூட்டங்கள் தேசத்திற்கு க்ஷேமத்தையோ அல்லது கேட்டையோ விளைவிக்கின்றன. இவ்விதமாக சூக்ஷ்மலோகங்களில் ஸங்கற்ப ரூபாராசிக்கூட்டங்கள் சேர்ந்து பலப்பட்டு சூக்ஷ்மமாக நன்மையையோ அல்லது தீமையையோ செய்துவருவதுபோல் அவ்வாறு ஸங்கற்பித்த ஜீவர்கள் ஸ்தூலப்பிரபஞ்சத்திலும் பலகாரணங்களை முன்னிட்டுச் சேர்ந்து கூட்டங்கூடி பிரத்தியக்ஷமாக சுகத்தையோ அல்லது கேட்டையோ விளைவிக்கிறார்கள்.

ஆகையால் நாம் ஸங்கற்பங்களின் பலவித சக்திகளினுடையவும் அவைகளின் ஸ்வரூபங்களுடையவும் யோக்கியதையை

உணரக்கூடுமானால் மானஸீகமாகக் குடும்பத்திற்கோ, சங்கத்திற்கோ அல்லது தேசத்திற்கோ எவ்வளவோ உதவிபுரியக்கூடும். நாம் நமது தவறுதல்களைப்பற்றி எவ்வளவு கவலை எடுத்துக்கொள்கிறோமோ அதுபோலவே குடும்பம், சங்கம், தேசம் இவைகளின் தவறுதல்களைப்பற்றிக் கவலை எடுத்தால்தான் சுகமுண்டு. அவ்வித குடும்பம், சங்கம், தேசம் இவைகளுக்கு இதர துர்ச்சங்கற்ப வியாப்திகள் வந்து அணுகி அதிலுள்ளவர்களுக்கு அவைகள் ஜனிக்கவொட்டாமல் அவர்களுக்கு ரக்ஷககவசமாக அவர்களைச் சுற்றிலும் பரிசுத்தமான வியாப்திகள் இருக்கக்கூடிய நிலைமையில் நாம் நமது ஹிதமான சங்கற்பங்களை பிரயோகிக்கலாம். விஷயங்கள் இவ்வாறு இருக்கிறபடியால் வாக்கு, காயங்களால் செய்யப்படும் கர்மங்களுக்கு மனமேமுக்கிய ஆதாரமாக இருக்கிறபடியால் கர்மங்களின் உத்தரவாதங்களைத் தெளிய உணர்ந்து பரிசுத்தசங்கற்பங்களையே பிரயோகித்தல் வேண்டும்.

தினப்பிரதி சிறிதுநேரம் தனது இஷ்ட தேவதையை ஸ்மரித்து ஸாவதானமாய் அதையே தியானித்து வருவதால் மனத்தின் அழுக்குகள் நீங்கும். ரூபதியானமன்றியில் அரூபத்தியானம் கிட்டாது. எவ்வித இஷ்ட தேவதையை த்தியானத்திற்கு அமைத்துக்கொண்டாலும் குற்றமில்லை. ஆனால் அந்த தேவதையானது ஸாத்விக அம்சம் பொருந்திய தேவதையாகமட்டு மிருக்கவேண்டியது. இவ்வாறு தியானித்து வர காலக்கிரமத்தில் மனத்தின்கண் உள்ள அழுக்குகள் நீங்கி ஈசுவரதேஜஸ் ஜாஸ்தி பிரவேசிப்பதால் அழுக்குகளாகிற பந்தத்தில் மூடப்பட்டிருக்கிற ஜீவன் தனது இனமாகிய பரமாத்மாவையடையவன்.

மனோ சங்கற்பங்களுக்கு இனி ஒரு தர்மம் உள:—

வியாதியை உண்டுபண்ணவும் குணப்படுத்தவும் கூடிய சக்தி அதற்குண்டு. இக்காலத்தில் கூட சில டாக்டர்கள் திரவியம் ஸம்பாதித்தலை உத்தேசித்து ஆரோக்கிய ஸ்திதியிலுள்ள தக்க தனவான்களிடம் சென்று அதிக ஸ்நேகபாவத்தைக் காண்பித்து அவர்களின் க்ஷேமத்தைக் கருதியவர்கள்போல்நடித்து அவர்களு

டன் வார்த்தையாடிக் கொண்டிருக்கும்பொழுது அவர்களிடம் இல்லாததாகிய ஒருரோகம் அவர்களுக்கிருப்பதாக அறிவிப்பதுவும் அதை ஊர்ஜிதம் செய்யும்பொருட்டு தங்கள் கைவசமுள்ளவர்களில் சிலரை அக்கனவான்களைப் பற்பலசமயங்களில் சந்திக்கச்செய்து தாம் உரைத்தபடி உரைக்கச்செய்வித்து உறுதிப்படுத்துவதும் வழக்கம இருந்துவருகிறதாகவும் தெரிய வருகிறது. டாக்டர் சொல்லியதை யனுஸரித்து இன்னும் பலர்களும் சொல்லவே அக்கனவான்கள் அவ்வித வார்த்தைகளை நம்பித் தங்களுக்கு ரோகமிருப்பதாகவே ஸ்மரித்துக் கவலைப்படத் துவக்கிவிடுவார்கள. ஸ்மரணைபலப்பட பலப்பட நிச்சயமாகவே ரோகமும் நேர்ந்துவிடும். அப்பால் ஸமயத்தை எதிர்பார்த்திருந்து மேற்படிபோலி டாக்டர்கள் வந்து அவர்களிடம் வேண்டியமட்டும் திரவியத்தைப்பெற்று சிகித்ஸைசெய்வார்கள். வெளிவேஷத்திற்கு மாத்திரம் பிரமாதமான மருந்துகளெல்லாம் கொடுப்பதாக அபிநயிப்பார்களே ஒழிய விஷயம் வேறு விதமாக விருக்கும். அதாவது தலைப்பில் வியாதியை உண்டுபண்ணுவதற்கு எடுத்த தந்திரத்தையே இதற்கும் அதற்கு எதிரிடை வார்த்தைகளால் தைரியம் சொல்லி வந்து வியாதியைக் குணப்படுத்துவார்கள். வியாதிஸ்தனுயிருப்பவன் எவ்விதம் தலைப்பில் வியாதியை மனோஸங்கற்பத்தால் உண்டுபண்ணிக்கொண்டானோ அதுபோலவே இப்பொழுதும் மனோஸங்கற்பத்தால் நிவர்த்தித்துக் கொள்வான். இவ்வாறு வியாதியை உண்டுபண்ணிக் கொண்டதற்கும் நிவர்த்தித்துக் கொண்டதற்கும் எத்தனையோ அத்தாக்ஷிகள் இருக்கின்றன. அவைகளை எழுதப்புகில்விரியும் மனோஸங்கற்பத்தால் இதாளுக்கு நாம் வியாதியைக்குணப்படுத்த வேண்டுமானுல் கிரமமான வழியில் மனதைப் பழக்கித் தக்க மனோசக்தியை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

இவ்வித மனோசக்தியை அடைய பல வழிகளுள. அவைகளில் ஒன்று, சரீரம் திடமாயும் நோய் முதலியவைகள் ஏதுமின்றி ஆரோக்கியஸ்திதியில் இருப்பதாகச் சரீர ஆரோக்கியத்தைப் பற்றிச் சிலக்குறிப்பிட்ட நேரங்களில் தியானித்தல், இவ்வாறு

செய்தலால் தன்னைச்சுற்றிலும் ஆரோக்கிய வியாப்தி ஏற்பட்டு அவ்வித பரிசுத்த வியாப்திகள் சரீரத்தில் தாக்கி சுகஸ்திதியை அளிக்கிறது. இக்காலத்தில் கூட மேற்கே அமெரிக்கா முதலிய பல விடங்களில் (Faith Cure) நம்பிக்கை சிக்ஸை என்ற விஷயத்தில் உறுதியுள்ள ஒருவகை சங்கத்தார் எந்த வியாதி நேரிட்டாலும் மருந்து அருந்துவதில்லை யென்றும் நம்பிக்கையாலேயே வியாதியைத் தீர்த்துக்கொள்ளுகிறதெனவும் உறுதியாகச் சங்கற்பித்து அவ்வாறே பிடிவாதமாய்த் தங்களனுஷ்டானத்தை நிறைவேற்றி வருகிறார்கள். மருந்துகளை அருந்தி வியாதிகளைத் தீர்த்துக்கொள்பவர்களின் ஸங்கியைவிட இவர்கள் ஸங்கியை தாமாஷாவுக்கு மேற்பட்டே இருக்கிறதாகவும் தெரியவருகிறது,

இன்னும் இதைவிட வேறொரு முக்கியவழியுண்டு. அதாவது தங்களுடைய சரீர ஆரோக்கியம் வியாதி இவைகளைக்கிஞ்சித்தேனும ஸ்மரியாமலே வேறு உத்தம வழியாகத் தியானிக்க வேண்டும். எவ்வாறெனின்? நான் ஈசுவரனுடைய அம்சம். நான் புருஷன். எனக்கு எவ்வித கஷ்டமுமில்லை. கஷ்டங்களெல்லாம் கூடிபிரகிருதி ஸம்பந்தமாகிய தேகேந்திரியாதிகளுக்கே ஒழிய அதற்கு அனன்யனாகிய எனக்கில்லை!! உண்மையில் ஆன்மா திடமாயும் பரிசுத்தமாயும் ஆரோக்கியமாயுமிருக்கிறது!! என்று தியானிக்கத்தகும்.

இதன்றி வேறொரு மார்க்கமுள. அவையாவன'' ஆன்மா ஸ்திரமுளது. ஒன்றினாலும் அசைக்கமுடியாது. சரீரமும் சரீர சம்மந்தப்பட்ட மற்றெ எல்லா விஷயங்களும் ஸ்திரமில்லாதன. அவை எல்லாம் மாயை என்றும் தியானிக்கத்தகும், ஆனால் இவ்வாறு சொல்லி சிலர்கள் இதன் கருத்தை தப்பாய் கிரஹித்துக்கொண்டு நித்தியகடைமைகளைச் செய்யாது தவறவிடுகிறார்கள். ஆன்மாவைத்தவிர மற்றெல்லாம அநித்தியமென்பதற்கு ஐயமில்லை. ஆயினும் தாத்காலத்தில் நம்மில் பெரும்பாலர்களுககு தங்களது பிரக்ஞையைவெளிப்படுத்த ஸ்தூல உபகரணத்தைத்தவிர வேறு சூக்ஷ்ம உபகரணங்களாகிற மனம் முதலிய இந்திரியங்கள் பரிபக்குவமடையவேயில்லை. நமக்கவ்வித யோக்கியதை உண்டாகுமளவும், நமதுஸ்தூல உபகரணங்களுக்குப்பசி, தாகம் முதலிய உபாதைகள் உண்டாவது நீங்குமளவும நாம் நித்திய கடைமைகளைக் கைவிடப்படாது. பகவான் கீதையில் சொல்லிய பிரகாரம் தேகயாத்திரை நடக்கவேண்டியதை உத்தேசித்தாவது அவசியம் கடைமைகளை நடத்தி

யே தீரவேண்டும். நம்மால் பிறர்களுக்கு எவ்வித உதவியுமளிக்காமல் அவர்களைக்கொண்டு தேகயாத்திரைக்கு வேண்டுபவைகளை அடைவோமானால் நாம் அவர்களுக்கு ருணஸ்தராவோம். மீளவும் அவற்றை இருக்குமளவும் கடன் பாக்கி நம்மேல் நின்று கொண்டேயிருக்கும். எப்பொழுதும் கிரந்தங்களில் சொல்லப்பட்டவைகளை ஸ்தூல பார்வையில் பார்த்துத் தவறுதலாக நடவாமல் அறிவைச் செலுத்திப் பார்த்து இயற்கையான அனுபவ வழியை அறிந்து அதன்படி நடத்தல் வேண்டும். ஆகையால் நாம் கிரமமான காலங்களில் பகிர்முகப்படும் மனதை இழுத்து அந்தர் முகப்படுத்தித் தனது ஆன்மஸ்வரூபத்தில் நிம்மதியாக நின்றுகொண்டு மனச்சுத்தியை அடையவும் சமதமாதிகுணங்களை அடையவும் நாம் மனதைப் பழக்கவேண்டும். ஜீவாத்மா விகாஸத்தை அடைந்து பரமாத்மா ஆகவேண்டுவதை உத்தேசித்தே நமது ஜீவன் பால்யாவஸ்தையிலிருக்கும் காலத்தில் அவசியம் சரீரபோஷணையைப்பற்றிக் கவலை எடுக்கவேண்டும். அதற்குத் தக்க கர்மங்களும் செய்தல்வேண்டும். தான் அதுவான பிறகு வேண்டுமானால அவ்வித கவலையை விட்டொழிக்கலாம். இங்கும் ஒருவார்த்தை சொல்லவேண்டி நேரிடுகிறது. பகவானே இதராள் கெட்டுப்போகாவண்ணம் தனக்கு கர்மத்தினால் எவ்வித பிரயோஜனமில்லையாயினும் தான் கர்மத்தை அனுஷ்டித்துக் காட்டுவதாக அருளியிருக்கிறார். ஆகையால் ஜனஸமூகத்தில் இருக்குமளவும் அவசியம் கர்மங்களைச் செய்தேதீரவேண்டும். சாதாரண ஜனங்கள் பெரியவனுடைய ஸ்தூல அனுஷ்டானங்களைக் கவனித்து அதைப் பின்பற்றுவார்களே ஒழிய அவனுடைய சூக்ஷ்ம நிலையை இன்னதென அறிந்து அனுஷ்டிக்கமாட்டார்கள் என்பது திண்ணம். இன்னும் மனதிற்கு எத்தனையோ தர்மங்களிருக்கின்றன. மனதைக் கிரமவழிகளில் பழக்குவதற்கும் எத்தனையோ மார்க்கங்களுள. அவைகளைப் பல கிரந்தங்கள் மூலமாயும் அனுபவகுருக்களின் மூலமாயும் தெரிந்துகொண்டு அப்பியஸிக்கத் தொடங்குவது குணமாகவிருக்கும்.

ஆகையால் மனதின்கண் ஜனிக்கும் அசுப இச்சாஸங்கற்பங்களைத்தெரிந்து அதற்கு எதிரிடையான சுபஇச்சாஸங்கற்பங்களைக்கொண்டு அவைகளை நழுவும்படி செய்து மனதைப் பரிசுத்த நிலைமைக்குக் கொண்டுவந்து ஸமஸ்த ஜீவகோடிகளுக்கும் உதவி புரிந்து எல்லோருடனும் உத்தமகதியை அடையக்கூடிய பாக்கியத்தை நம்மெல்லோருக்கும் ஜகதீசுவரன் கொடுத்தருள் புரிவாராகவும்.

சுபமஸ்து.

சமாசாரக்குறிப்பு.

தொடர்ச்சி.

4. மேற்கண்ட தர்மரக்ஷண சபையின் விதிகளும் நியமங்களும் அடங்கிய நகல் இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்த நகலானது சரியானதென்று அடியில் கையொப்பமிட்டிருக்கிறவர்களும் ஷை சபையின் நிர்வாகஸ்தர்களில் 7 பெயர்களும் உறுதிசொல்லுகிறார்கள்.

மேற்கண்டவர்களின் கையொப்பங்கள்.	அவைகளுக்கு சாக்ஷி.
1. V. கிருஷ்ணஸ்வாமி அய்யர்.	T. A. கோபாலசாமி.
2. L. A. கோவிந்தராகவய்யர்.	
3. K. நாராயணசாமி அய்யர்.	
4. K. கிருஷ்ணஸ்வாமிராவ்.	V. அனுமந்தராவ்.
5. V. C. சேஷாசாரி.	S. வெங்கடரத்னம்
6. P. நாராயணன்.	V. குருமூர்த்தியய்யர்
7. P. R. சுந்தரமய்யர்.	R. சீனிவாசஅய்யர்.

1907-ஹு மார்ச்சுமீ 5உ

ரிஜிஸ்டர் செய்ததற்கு சர்டிபிகேட்டின் நகல்.

1906—07ம்-ஹு 15-ம் நம்பர்:

இந்தியா கவர்னர் ஜனரலவர்களுடைய 1860-ம் வருஷத்திய 21-ம் சட்டப்படி "தர்மரக்ஷணசபையென்கிற நாமதேயத்துடன்" இந்தச்சபை ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறதென்று இதன் மூலமாய் சர்டிபை செய்கிறேன்.

வி. சுந்தரராமய்யர்,
ஜாயிண்டுஸ்டாக் கம்பெனி ரிஜிஸ்டிரார்.

1907-ம்ஹு மார்ச்சுமீ 5உ. } (முகர்.)

தர்மரக்ஷணசபையின் விதிகளும் நியமங்களும்.

1. தர்மரக்ஷண சபையின் நிர்வாகஸ்தர்கள்.—1 பிரசிடெண்டு, 2 சிக்ரடெரிகள், 7 பெயர்களுக்குறையாத இதர மெம்பர்களுமாம்.

2. ஷை நிர்வாகஸ்தர்களின் கடமைகளும் அதிகாரங்களும், உத்திரவாதங்களும் அடியில் வருமாறு.

i. சென்னை ராஜதானியிலுள்ள ஹிந்துமத சம்பந்தமான தேவாலயங்கள், பொதுஜன தர்மங்கள் முதலானவைகளுக்கும் அவைகளின் சொத்துக்களுக்கும் ஜாப்தா தயார் செய்வித்தலும்.

ii. தேவஸ்தானம் கமிட்டி மெம்பர்களுக்கும், இதரதர்மங்களின் விசாரணை கர்த்தர்களுக்கும், அவர்களின் விசாரணைக்குள்ளிருக்கின்ற தர்மங்களை பாதுகாப்பதற்கும் அபிவிருத்திக்கும் அனுகூலமான அபிப்பிராயங்களையும் உபாயங்களையும் தெரிவித்தலும், அந்தந்த தர்மங்களை காப்பாற்றும் விஷயத்திலும் அவ்வபிப்பிராயங்களையும் உபாயங்களையும் நிறைவேற்றும் விஷயத்திலும் ஷை தேவஸ்தானம் கமிட்டிகளுக்கும் தர்மகர்த்தர்களுக்கும் உதவிபுரிதலும்.

iii. ஷை தேவஸ்தானங்கள், தர்மாலயங்கள் முதலானவைகள் சரியாயும் ஒழுங்காயும் நடத்தப்பட்டு வருகின்றனவாவென்று விசாரணை மூலமாகவும் உத்தியோகஸ்தர் மூலமாகவும் அப்போதுக்கப்போது கவனித்துப்பார்த்தலும்.

iv. ஷை தர்மங்கள் சரியாய் நடைபெறவும், அவைகள் சீர்திருத்தம் பெறவும், அபிவிருத்தியடையவும், தர்மங்களின் சொத்துக்களை பாதுகாக்கவும், அவைகளின் விசாரணை விஷயத்தில் வேண்டுமானால் நூதனவிவஸ்தை ஏற்படுத்தவும், வேண்டிய சமயங்களில் விவகாரங்கள் கோர்ட்டுகள் மூலமாகநடத்தவும். நடப்பித்தலும்.

v. ஷை விஷயங்களை நிறைவேற்றவேண்டிய திரவியசகாயம் சேகரித்தலும்.

vi. கோர்ட்டு உத்திரவுப்படி ஒப்பித்தலாவது அல்லது சட்டத்தை அனுசரித்து மற்றெவ்விதமாயாவது ஷை தேவஸ்தானங்கள் மற்றதர்மாலயங்கள் தர்மங்கள் இவைகளை தங்கள் மேல்விசாரணையில் வைத்துக்கொள்ளுதலும், அல்லது பொதுவாய் மேல்பார்த்தலும் முதலியனவுமாம்.

3. பிரகிருத சபையின் பிரசிடெண்டும், சிக்ரிடெரிகளும், இரண்டு வருஷங்களுக்கு ஷை உத்தியோகத்தை வகிக்கத்தக்கது. பிறகு மறுபடியும் அவர்களைத் தெரிந்தெடுத்துக்கொண்டு நியமனம் செய்வதில் ஆக்ஷேபணையில்லை. பொதுசபையாரின் அங்கத்தினர்களினின்று யாரையும் பிரசிடெண்டாகவும், சிக்ரிடேரிகளாகவும், நியமிக்க நிர்வாகசபையாருக்கு அதிகாரமுண்டு.

4. ஷை உத்தியோகங்களை வகிக்கின்றவர்கள், உத்தியோகங்கள் நீங்கவே அவர்கள் நிர்வாக சபையினின்றும் விலகவேண்டியவர்கள். ஷை நிர்வாகசபையின் மற்ற அங்கத்தினர்கள். இரண்டு வருஷத்திற்கு ஒருமுறை பொதுச்சபையின் மெம்பர்களினின்று, நிர்வாகசபையாரால் அச்சபையின் வருஷ மீட்டிங்கில், தெரிந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்படுவார்கள். முதலில் நியமிக்கப்பட்ட விசாரணைகர்த்தர்கள் இரண்டுவருஷம் வேலைபார்க்கத்தக்கவர்கள் இரண்டு வருஷம் ஆன பிறகு ஒவ்வொரு வருஷத்தி

லும் சீட்டுப்போட்டு இரண்டு பெயர்கள் ஷை நிர்வாக சபையினின்று விலக்கப் பெறுவார்கள். ஆனால் அப்படி விலக்கப்படுவோர்களின் யாரேனும் ஒருவர் திரும்பவும் ஷை நிர்வாக சபையின் அங்கத்தினராக தெரிந்தெடுக்கப்படலாம். மற்றவருக்கு பதிலாக, முந்திய வருஷத்தில் அச்சபையில் அங்கத்தினராக இல்லாத வேறொருவரை தெரிந்தெடுத்துநியமனம்செய்தல் வேண்டும்.

5. பிரசிடெண்டாவது, சிகிரடெரிகளாவது, நிர்வாக சபையின் மற்ற அங்கத்தினராவது இறந்துபோனாலும் அல்லது ராஜீனமா கொடுத்துவிட்டாலும், ஷை நிர்வாக சபையின் மீதமிருக்கின்ற அங்கத்தினர்கள் இவ்விதம் ஏற்படும் காலிகளுக்கு பொதுச்சபையின் அங்கத்தினரை ஷை நிர்வாக சபைக்கு அங்கத்தினராக நியமனம் செய்தல்வேண்டும். அப்படி நியமனம் செய்யப்படுகிறவர் முன்காலியை உண்டுபண்ணினவர், காலி நேராமலிருக்குமாகில் தான் இருக்கவேண்டுமோகில் தான் இருக்கவேண்டிய காலமுழுமையும், வேலை பார்க்க அதிகாரமுண்டு.

6. நிர்வாகசபை அங்கத்தினர்களின் ஸ்பிஷல் மீட்டிங்கு மூலமாய் அச்சபையின், அங்கத்தினர்களில் 5ல் 3 பாகஸ்தரர்கள் சேர்ந்து யாரேனும் அன்னிர்வாக சபையின் அங்கத்தினரை அச்சபையினின்று விலக்கிவிடலாம் அந்த ஸ்பிஷல் மீட்டிங்கைப்பற்றிக் குறைந்தபக்ஷம் இரண்டுமாதம் முன் நோட்டீஸ் கொடுக்கவேண்டும்.

7. நிர்வாக சபையார் மூன்று மாதத்திற்கு ஒரு முறையாவது கூடவேண்டும். பிரிசிடெண்டு ஸ்பிஷல் மீட்டிங்கை தமக்கு யுக்தானுசாரமாய் ஏற்படுத்தலாம். நிர்வாக் சபையின், குறைந்தபக்ஷம் 3 அங்கத்தினர்களுடைய எழுத்துமூலமான வேண்டுகோளின்மேல், சிகிரிடெரிகள், ஸ்பெஷல் மீட்டிங்கை ஏற்படுத்தலாம்.

8. நிர்வாகசபையின் சாதாரணமீட்டிங்குக்கும்,ஸ்பெஷல்மீட்டிங்குக்கும், குறைந்தபக்ஷம் 3 பெயர்கள் ஆஜராகவேண்டும் அதற்குக்குறைந்தால் அடுத்த அடுத்த தினங்களில் ஷை மீட்டிங்கு கூடும்படியாகச் செய்யலாம். அல்லது ஒரு தேதியைக்குறிப்பிட்டு ஷை மீட்டிங்கை ஏற்படுத்தலாம். அப்போது இரண்டுவாரம் நோட்டீஸ் கொடுத்தல்வேண்டும். அம் மீட்டிங்குகளில் மேற்கண்டபடி மூவர்களுக்குக்குறைந்த அங்கத்தினர்கள் இருந்தாலும், உத்தேச விஷயத்தை முடிவு செய்துகொள்ளலாகும்.

9. நிர்வாகசபை மீட்டிங்கில் பிரசிடெண்டு அவர் ஆஜரில்லாதகாலத்தில் அச்சபையின்கால் தெரிந்தெடுக்கப்பட்ட வேறு அங்கத்தினர் சபாநாயகராக இருக்கவேண்டியது. அச்சபையின் மீட்டிங்கில் ஒருவிஷயத்தைப்பற்றிய அபிப்பிராயத்தில் இரண்டு வகுப்பாகப்பிரித்து, அவ்விருப்

பின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை சமமாகயிருக்குமாகில், சபாநாயகர் அதிகமாக ஒரு ஓட்டு தமக்கு ஏற்படுத்திக்கொண்டு சபைமுன்னுள்ள விஷயத்தை மெஜாரிட்டியாகத் தீர்மானித்துக்கொள்ளலாம்.

10. சபையின் காரியாதிகள் நடைபெறும்படி அவசியமான சிப்பந்திகளை, பிரசிடெண்டும், சிக்ரிடெரிகளும் நியமனம்செய்துகொள்ளலாம் அந்நியமனம் ஏற்பட்டதேதிமுதல் ஊர்ஜிதத்துக்கு வரத்தக்கது. நிர்வாக சபையாரின் மெஜாரிட்டியார் அந்த நியமனத்தைரெத்து செய்கிறவரையில் அந்நியமனம் நிலைபெறுவதாகும்.

11. நிர்வாகசபையார் சபையின் சிப்பந்திகளின் சம்பளங்களையும், சிக்ரிடெரிகளுடையவும் அங்கத்தினர்களுடையவும் இதர உத்தியோகஸ்தர்களுடையவும், பிரயாணச் சிலவையும், படிச்சிலவுகளையும் பற்றி விவஸ்தை செய்யவேண்டியது.

12. சபையின் அங்கத்தினராகவிரும்புவோர், ஏற்பட்டிருக்கிற பாரத்தை அனுசரித்து கையெழுத்துப்போட்டு இரண்டு மெம்பர்களின் சம்மதிகையெழுத்துடனே மனுப்பண்ணிக்கொள்ளவேண்டும்.

13. நிர்வாக சபையாருக்கு அம்மனுவை அங்கீகரிக்கவும் தள்ளிப்போடவும் அதிகாரமுண்டு. ஹிந்துவாக இல்லாததும், 21 வயதுக்கு மேற்படாமலுமிருக்கிறவரை அங்கத்தினராக சேர்த்துக்கொள்ளக்கூடாது.

14. பொது சபையின் ஒவ்வொரு அங்கத்தினரும் வருஷந்தோறும் ரூபாய் 3 சந்தா முன்பணமாக கொடுத்துவரவேண்டும். அல்லது ஒரே மொத்தமாக ரூபாய் 50 கொடுத்துவிடலாம்.

15. வருஷம் ஒருமுறை, வருஷத்தின் முதல் மூன்றுமாதத்துக்குள் சபையின் மீட்டிங்கு கூடவேண்டும். அதில் நிர்வாக சபையாரின், தாம் முன்வருஷத்தில் நடத்திய விஷயங்களைப்பற்றி வருஷாந்தர ரிபோர்ட்டும் சபையின் வரவு சிலவு கணக்கும் வாசிக்கப்படும். ஷை மீட்டிங்கைத்தவிர பிரசிடெண்டு ஸ்பிஷல் மீட்டிங்குகள் தம்முடைய யுக்தானுசாரமாக ஏற்படுத்தலாம்.

16. சபையின் ரிகார்டுகள், முக்கிய தஸ்தாவேஜுகள் எல்லாம் சிக்ரிடெரிகளின் சுவாதீனத்தில் இருக்கவேண்டியது. அவர்கள் சபையின் காரியதரிசிகளாக இருக்கவேண்டியது.

17. சபையின் சந்தாக்கள், நன்கொடைகள், இன்னும் மற்றுமுள்ள பணங்களை பிரசிடெண்டு அல்லது சிக்ரிடெரிகளும் பெறலாம். வசூலிக்கலாம் அவர்களில் யாரேனும் ஒருவர் கையொப்பமுள்ள ரசீது போதுமானது.

18. சபையின் பணங்கள் ஆதரவுகள் பிரசிடெண்டுபேருக்கு டிபாசிட்டு செய்தல் வேண்டும்.

19. பணங்கள் சம்பந்தமான செக்குகளில் பிரசிடெண்டு அல்லது சிக்ரிடெரிகள் கையொப்பம் செய்யலாம்.

20. நடப்புக்கு வேண்டாத பணங்களை நிர்வாக சபையாரின் அனுமதியின் மேல் கவர்ண்மெண்டு சிக்கூரிட்டிகளிலும், இன்னும் மற்ற பொ

துவான செக்கூரிட்டிகளிலும், ஸ்தாவர சொத்துக்களின் இரயமாக வாங்குவதிலும் ஸ்தாவர சொத்துக்களின் மூதல் ஈட்டிலும் விநியோகித்து பந்தோபஸ்துப் படுத்தவேண்டும். ஷை நிர்வாக சபையாரின் அனுமதியின் மேல் அவைகளை விற்கவும் ஒத்தி அல்லது ஈடுவைக்கவும், அல்லது வேறு எவ்விதமாகவாவது மாற்றவும் செய்யலாம்.

21. சபை சம்பந்தமான சொத்துகளை விநியோகம் செய்கிற தஸ்தாவேஜுகள், கிரயசாஸனங்கள் முதலியவைகளில் பிரசிடெண்டு அல்லது சிக்ரிடெரிகளின் கையொப்பமும் சபையின் முத்திரையும் இருத்தல் வேண்டும்.

22. சபையார் சிக்ரிடெரிகளின் மூலமாய் பிராது செய்யலாம் சபையின் மேல் வியாஜ்ஜியம் சிக்ரிடெரிகளின் பேர்களைவைத்துச்செய்யலாம்.

23. சரியான ஆடிடரைக்கொண்டு சபையின் வரவுசிலவு கணக்குகளை வருஷம் ஒருமுறை பரிசீலனை செய்தல்வேண்டும். அந்த ஆடிடரை ஒவ்வொருவருஷம் முடிய கடைசி மூன்றுமாதங்களுக்குள், நிர்வாகசபையார் சாதாரணமீட்டிங்கில், நியமனம் செய்தல்வேண்டும்.

24. இச்சபை ரிஜிஸ்டரான இரண்டு வருஷமான தின்மேல் சபையின் காரியாதிகள் நடைபெறும்படியாம் போதுமான திரவியசகாயம் கிடைக்காமலாவது. அல்லது ஜனசமூகத்திற்கு சாதகம் உண்டாகும்படியாய் இச்சபையை நடத்த முடியவில்லை என்றாவது அபிப்பிராயப்படும் அந்நிர்வாகசபையாரின் மெஜாரட்டி அங்கத்தினர்கள் சபையின் காரியாதிகளை ஒடுக்கி சபையை நிறுத்த அதிகாரமுண்டு.

25. சபையின் முக்கியஸ்தானம் சென்னப்பட்டணத்தைச் சேர்ந்த மைலாப்பூர்.

26 இந்த சபையின் காரியாதிகளை நடத்த அனுகூலமான உபவிதிகளை நிர்வாகசபையார் ஏற்படுத்திக்கொள்ள அதிகாரமுண்டு. ஷை உபவிதிகள் சபையின்யாதாஸ்த்துக்கும் சபையின் பொதுவிதிகளுக்கும் விரோமில்லாமல் இருத்தல்வேண்டியது.

27. நிர்வாகசபையாரின் வேண்டுதலின்மேலும், பொதுசபையின் அங்கீகாரத்தின்மேலும், சபையின்விதிகளைமாற்றவும், கூட்டவும், குறைக்கவும் செய்யலாம்.

ஷை தர்மரக்ஷணசபையின் 3 அங்கத்தினரால் இவ்விதிகள் சரியானவைகளென்று உறுதியாய்சொல்லப்பட்டது.

கையொப்பம். { வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர்.
கே நாராயணஸ்வாமி அய்யர்.
வி. சேஷாசாரி. }

சந்தா வரவு.

அடியில்க்கண்ட சந்தாதார்களிடமிருந்து ஆகஸ்டு செப்டம்பர் மீத்தில் சந்தாவை வந்தனத்தோடு பெற்றுக்கொண்டோம்.

பெயர்.		ஊர்.	ரூ. அ.
ஜனாப ஸ்ரீ M. ராமசாமியர்	Avl.	திருவாரூர்	1—8
,, சிவானந்தபிள்ளை	,,	திருவாரூர்	1—8

ஜுலை மீ	சின்னப்பாபிள்ளை	,,	திருவாரூர்		1—0
,,	வாசுதேவபிள்ளை	,,	விஜயபுரம்		1—8
,,	கோதண்டபாணி நாயக்கர்	,,	திருவாரூர்		1—8
,,	கி. ராமய்யர்	,,	மேலையூர்	07—08	1—8
,,	T. S. கல்லியாணராமய்யர்	,,	குளித்தலை	07—08	1—8
,,	T. M. குருபரானந்தசுவாமிகள்		வேட்டைக்காறன்புத்தூர்		1—2
,,	V. S. ஸாம்பசிவய்யர்	,,	பெங்களூர்		1—8
,,	விஸ்வநாதசாஸ்திரி	,,	நாகப்பட்டணம்		1—2
,,	A. சாம்பவமூர்த்திய்யர்	,,	பரமக்குடி		1—8
,,	V. கல்லியாணராமய்யர்	,,	தூத்துக்குடி		1—8
ஆகஸ்ட்	சுப்பிரமணிய சாஸ்திரியள்	,,	ராமேசுவரம்		1—8
மீ ச	கண்ணுஸாமிய்யர்	,,	மூங்கிலக்குடி		1—8
ந்தா.	டி. மீனாட்சிசுந்தரம்பிள்ளை	,,	திருப்பூர்		1—8
,,	நாராயணஸாமிய்யர்	,,	செல்லூர்		1—8
,,	குப்புஸாமிய்யங்கார்	,	ராஜமந்திரி		1—8
,,	சிவலோகமுதலியார்	,,	பூங்குடி		1—8
,,	ராகவய்யர்	,,	சித்தூர்		1—8
,,	குப்புஸாமிய்யர்	,,	அலிவலம்		1—8
,,	T. ஸாமிய்யர்	,,	சேலம்		1—8
,,	ஆத்மநாதசாஸ்திரியள்	,,	திருத்துறைப்பூண்டி		0—8
,,	கிர்ஷ்ணஸாமிய்யர்	,,	திண்டுக்கல்		1—2
,,	அனந்தகிர்ஷ்ணய்யர்	,,	சேலம்		1—8
,,	ஹரிஹரசாஸ்திரியள்	,,	புதுகோட்டை		1—8
,,	A. விசுவநாதய்யர்	,,	அவநாசி		1—8
,,	S, A. கிர்ஷ்ணஸாமிய்யர்	,,	தூத்துக்குடி		1—8
,,	V. S. ஸஹஸ்ரநாமய்யர்	,,	அரிப்பாடு		1—2
,,	முத்துஸாமிமுதலியார்	,,	தாத்தய்யங்கார்பேட்டை	07-08	1—8
,,	சிகரடெரி சாந்தகட்	,,			
,,	கசற்குணசபை	,,	திருப்பறங்குன்றம்		1—8
,,	S. S. சுருளாண்டி தென்கொண்டார்		அம்மாப்பட்டி		1—2
,,	நாராயணஸாமிய்யர்	,,	மன்னார்குடி		1—8
,,	M.V. வாஸுதேவய்யர்	,,	ஜெம்மல் மடுகு		1—8
,,	சுப்பிரமணியசாஸ்திரியள்		முட்டம்		1—8
,,	கிர்ஷ்ணய்யர்	,,	திருவங்காடு		1—8
,,	L. ராமானுஜய்யர்	,,	ஆத்தூர்		1—8
,,	வெங்கிடசுப்பய்யர்	,,	மதுராந்தம்,		1—8
,,	T. ஆதிநாரர்யணசெட்டியார்		சேலம்		1—8
,,	அராவமுதய்யங்கார்	,,	நன்னிலம்		1—8
,,	ஸர்வோத்தமராவ்	,,	பொரசம்பாக்கம்		1—8
,,	பாலகிர்ஷ்ணய்யர்	,,	நாகப்பட்டணம்		1—8
,,	T. A. சாமிநாதய்யர்	,,	திருச்சினாப்பள்ளி		1—8
,,	T. R. முத்துஸாமிபிள்ளை		திருச்சினாப்பள்ளி		1—8
,,	T. C. தியாகராஜபிள்ளை	,,	மருதூர்		1—0
,,	ராமதுரையய்யர்	,,	மன்னார்குடி		1—8

ஆகஸ்ட்டு	சேஷய்யங்கார்	,,	மன்னார்குடி	1—8
,,	துரைஸாமி செட்டியார்	,,	ஷை	1—8
,,	கோவிந்தசாமி நாயக்கர்	,,	ஷை	1—8
,,	ராமசந்திரய்யர்	,,	ஷை	1—8
,,	கிர்ஷ்ணய்யர்	,,	ஷை	1—8
,,	வீரராகவசெட்டியார்	,,	குத்தாலம்	1—8
,,	கோதண்டராமய்யங்கார்	,,	செம்போடை	1—8
,,	O. S. வெங்கிட்டருமய்யர்		திருவாரூர்	1—8
,,	கிர்ஷ்ணஸாமிய்யங்கார்	,,	சீர்காழி	1-8
,,	சுப்பிரமணியய்யர்	,,	மீன்பிசல்	1—8
,,	வெங்கிட்டருயலுநாயடு	,,	மாணலூர்	1—8
,,	க. வெ. சிவருமய்யர்	,,	கோயம்புத்தூர்	1—0
,,	S. நரஸிம்மய்யர்	,,	காயங்களம்	1—8
,,	K. வைத்தினதய்யர்	,,	தஞ்சாவூர்	1—2
,,	துரைஸாமிய்யர்	,,	கும்பகோணம் அட்வான்சு	5—0
,,	07—1910	,,		
,,	வெங்கிடாஜலய்யர்	,,	ஜலக்கண்டாபுரம்	1—2
,,	குட்டி முருகப்பமுதலியார்		புச்சிரெட்டிப்பள்ளி	1—8
,,	N. C. கந்தஸாமிநாயக்கர்		கும்பகோணம்	1—8
,,	கிர்ஷணய்யர் செங்குவய்யர்		கோட்டயம்	1—2
,,	K. விட்டல்ருவ்	,,	சேலம்	1—8
,,	சுந்தரப்பய்யர்	,,	திருவாரூர்	1—8
,,	S. முதலியார்	,,	விரைபர்கதென் ஆப்ரிக்கா 07	1—14
செப்ட	H. ராமஸ்வாமிய்யர்	,,	கோட்டயம் —08	1—2
ம்பர்மீ	உத்திராபதியாபிள்ளை	,,	திருச்சங்காட்டங்குடி.	2—0
,,	அய்யாகண்ணுபிள்ளை	,,	கொங்காயநல்லூர் 07—08	3—0
,,	பஞ்சாபகேசஉடையார்	,,	அரையூர்	5—0
,,	விஜயரங்கமுதலியார்	,,	தஞ்சாவூர்	1—8
,,	சதாசிவராவ்	,,	தஞ்சாவூர்	1—8
,,	N. ராமனுதய்யர்	,,	பரவக்கரை 07—08	1—8
,,	V. கிர்ஷணஸாமிய்யர்	,,	ஆடுதுரை 07—08	1—8
,,	கோபாலய்யர்	,,	நாவல்ப்பூண்டி 07—08	1—0
,,	M. திருவேங்கிடம்	,,	போர்ட் பிளேர்	1—8
,,	ஸத்தாறு சுப்பய்யர்	,,	ஆலப்பிழை 07—08	1—8
,,	G. T. அனந்தநாராயணபிள்ளை		சாலிக்கிராமம்	1—8
,,	சீனிவாசன்	,,	ஊத்தங்கரை	1—0
,,	S. சுப்பய்யாபிள்ளை	,,	நாகபட்டணம்	1—8
,,	மு. கோபாலசாமிசெட்டியார்		காங்கயம்	0-14
,,	V. ராமசந்திரய்யர்	,.	வீரராகவபுரம்	1—8
,,	M. K. சுப்பிரமணிய்யர்		கும்பகோணம்	1—8
,,	A. S. கிர்ஷ்ணசாமி சாஸ்திரியள்		பரமகுடி	1—8
,,	R. சேஷய்யங்கார்	,,	திருநல்வேலி	1—8

மாற்றுப் பத்திரிகைகள்.

தியாஸபிஸ்ட், சுதேசமித்திரன், கோவைகலாநிதி, சக்ரவர்
செப்டம்பர்
தனி, தென் இந்தியா மெயில், தஞ்சை ஜனநேசன், சமஸ்கிருதப் பத்திரிகை. (புதுக்கோட்டை.) P. H. School மாக்ஸின் ஆத்மபோதினி, (யாழ்பாணம்.) நீலலோசனி (நாகை.) ஜனானுகூலன், (தஞ்சை.) முதலியவைகளை வந்தனத்தோடு பெற்றுக் கொண்டாம்

(ப—ர்.)

ஏஜண்டுகள் தேவை!

நமது பத்திரிகைக்கு சந்தாதாரர்கள் சேர்க்கவும் பணம் வசூலிக்கவும் ஏஜண்டுகள் தேவை! தக்க கமிஷன் கொடுக்கப் படும். தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, சென்னை, முதலிய விடங்களில் ஏஜண்டுகளாயிருக்க விரும்புவோர்கள் விபரங்களுக்கு உடனே நேரில் எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

குமாஸ்தா தேவை.

தமிழ், ஸமஸ்கிருதம், இங்கிலீஷ், முதலிய பாஷைகளில் பழக்கமுள்ளவர்கள் விண்ணப்பம் செய்து கொள்ளலாம். வெளிகளிலுஞ் சென்று வேலை செய்ய ஸாமர்த்தியத்தோடிருப்பவர்கள் வெகு சிலாக்கியம். புத்திசாலித் தனத்திற்குத் தக்கபடி சம்பளம். குறைந்தது, ஒரு வருஷத்திற்குள் பக்கங்களிற் செல்லக்கூடாது. மற்ற விபறங்கள் நேரில்.

(ப—ர்.)

பிரம்மஞ்ஞானப்பத்திரிகை.

1. 1906-ஹு ஜூலைமீ முதல் திருவாரூரில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது இதில் ஹிந்துமததத்துவங்கள், பகவத்கீதைக்கு நூதனதமிழ் மொழிபெயர்ப்புகள் மஹான்களின் சரித்திரங்கள், அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம், தியாஸபி, விவேகாநந்தரின் உபந்நியாசங்கள், முதலிய விஷயங்கள் அடங்கியிருக்கும் தவிர, மடங்கள், ஆலயங்கள், தருமசத்திரங்கள் பரிபாலனம் செய்யப்பட்டு வரும் நேர்மை, சீர்குலைவு முதலியவைகளைப் பற்றிய ஸமாச்சாரக் குறிப்புகளும் பின்னும் மதசம்பந்தமான சமாச்சாரங்களும் அடங்கியிருக்கும்.

2. சாமான்ய ஏழைகள்கூட சுலபமாய் வாங்கி வாசித்துப் பயனெய்துமாறு இந்தியாவிற்கு வெகு சொற்பமாகிய வருடச் சந்தா ரூ 1—8-ம் சிங்கப்பூர், மோல்மீன், பினங்கு முதலிய இடங்களுக்கு ரூ 2—8 மாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஹெட்மாஸ்டர் மூலமாய் விண்ணப்பம் செய்துகொள்ளும் மாணாக்கர்களுக்கு மாத்திரம் ரூ 1 க்குக் கொடுக்கப்படும். சந்தா அட்வான்ஸாகவே செலுத்தப்படவேண்டும். அப்படி செலுத்துபவர்களுக்கு வருடத்திற்கு ஒரு படம் இனாமாயளிக்கப்படும். வருடக் கடைசியில் செலுத்தப் பிரியமுள்ளவர்களுக்கு வருட சந்தா ரூ 2 வீதம் சார்ஜ் செய்யப்படும். சந்தாதார்களாயிருக்க விரும்புவோர்கள் வருஷத் துவக்கமாகிய ஜூலையிலிருந்தாவது அல்லது ஜனவரியிலிருந்தாவது பத்திரிகை பெற்றுக்கொள்ளவேண்டும். வேறுவிதமாய்ப் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

தனிக்காப்பி கிரயம் அணா 4.

உபந்நியாசங்கள் முதலிவைகள் தெளிவாயும் நேர்த்தியாயும் பிரதி மீ 20 க்குள் கிடைத்தாலன்றி அடுத்த மீத்தில் பிரசுரஞ் செய்யப்படமாட்டாது. நெருக்கமாயுந் தெளிவாயுமிராத உபந்நியாசங்கள் பிரசுரஞ் செய்யப்படமாட்டாது. வாபீசு செய்யப்படவுமாட்டாது. இதில் கையெழுத்துப் போடப்பட்டிருக்கும் உபந்நியாசம் முதலியவைகளுக்குப் பத்திராதிபர் ஜவாப்தாரியல்ல. பத்திரிகை கிடைக்காதவர்கள் ஒரு மாதத்திற்குள் தெரிவித்துக் கொண்டாலொழிய பத்திரிகை மறுபடியுமனுப்பப்படமாட்டாது. அவசியம் வேண்டியதாயிருந்து கைவசமுமிருந்தால் காப்பி 4 அணா வீதம் பெற்றுக்கொண்டு கொடுக்கப்படும். பதில் வேண்டியவர்கள் ரிப்ளை கார்டு அல்லது லேபிள் அனுப்பினால் பதில் அனுப்பப்படும்.

Advertisements for moderate charges.

பிரசுரங்கள் மிதமான சார்ஜுக்குப் போடப்படும்.

Apply to,

எ. இராமய்யர்,
எடிட்டர் & புரொப்ரைட்டர்,
பிரம்மஞ்ஞான பத்திரிகை, திருவாரூர்.